
மார்ச் - ஏப்ரல்
2007
தெளிவு
وَمَا عَلَيْنَا إِلَّا الْبَلَاغُ الْمُبِينُ
5
كُلُّ حِزْبٍ بِمَا لَدَيْهِمْ فَرِحُونَ
ஒவ்வொரு கூட்டத்தினரும் தங்களிடம் உள்ளதைக்
கொண்டு சந்தோஷப்படுகின்றனர்.
எனவே வாசகர்களாகிய நீங்கள்
وَاعْتَصِمُوا بِحَبْلِ اللَّهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا
அல்லாஹ்வின் கயிற்றை அனைவரும் சேர்ந்து
பிடித்துக் கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள்.
வெளியீடு : ஜமாஅதுல் முஸ்லிமீன்
30/-

# ஆசிரியர் கருத்து

எல்லாம் வல்ல அல்லாஹ் அவனது தூய இஸ்லாம் மார்க்கத்தை மனிதர்கள் பின்பற்றி வாழ்வதற்கான ஒரே மார்க்கமாக இப்புவியில் இறக்கி விட்டு, அந்த மார்க்கத்தின் ஒவ்வொரு சிறிய, பெரிய விடயங்களையும் தனது சொல்லாலும், செயலாலும், அங்கீகாரத்தினாலும் தெளிவாக வெளிப்படுத்திக் காட்டுவதற்கான ஒரே தூதராக முஹம்மது (ஸல்) அவர்களையும் அனுப்பி வைத்தான். அந்தத் தூதரையும், அவரை முழுமையாகப் பின்பற்றி வாழ்ந்த அவரின் தோழர்களையும் உலகம் முடியும் வரை ஒரு முன்மாதிரியாகவும் ஆக்கி வைத்தான்.

இவ்வாறு வலுவான அடித்தளத்தின் மீது நிர்மாணிக்கப்பட்ட, ஒரே தலைமைத்துவத்தை அச்சாணியாகக் கொண்ட இந்த தூய இஸ்லாமிய சமுதாயம், கால ஓட்டத்தில் கருத்து முரண்பாடு, சுயநலம், உலக ஆசை என்பவற்றால் பிளவுபட்டு பன்னூறு கூறுகளாகப் பிரிந்து, ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ளும் நிலையை அடைந்திருப்பது இன்று கலிமாச் சொன்ன ஒவ்வொரு மனிதனையும் வெட்கித் தலை குனிய வைத்துள்ளது. ஒரு புறம் யூதர்களும் மறுபுறம் கிறிஸ்தவர்களும் இம்மக்களைப் பந்தாடிக் கொண்டிருக்கின்றார்கள். மக்கள் பலமிருந்தும் பொருளாதார வலமிருந்தும் அனைவரும் கோழைகளாகி விட்டனர். இதற்கான காரணம் என்ன?

வெறுமனே கலிமாவை மொழிந்து கொண்டு, செயலிலே யூத, கிறிஸ்தவர்களையும், ஜாஹிலிய்ய கொள்கைகளையும் பின்பற்றிக் கொண்டு, இம்மையிலும் மறுமையிலும் வெற்றியை அள்ளித்தரும் சத்தியத்தை தவற விட்டதே அனைத்து பின்னடைவுகளுக்கும் காரணமாகும்.

குர்ஆன், ஸுன்னா ஒளியில் ஒரு முஸ்லிம் அனைத்து விடயங்களிலும் அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் ஒரே இஸ்லாமிய தலைவருக்கும் கட்டுப்பட்டு வாழ வேண்டும். மார்க்க விடயங்கள் அனைத்தும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களைப் பின்பற்றியதாக இருக்க வேண்டும். வேறு எந்த மனிதனையும் பின்பற்ற முடியாது. ''ஹராம்'' என விலக்கப்பட்ட அனைத்தையும் விட்டுத் தூரமாகி விட வேணடும்; தனது முழு முயற்சியும் மறுமையில் சுவர்க்கத்தை அடைய வேண்டும் என்பதாக இருக்க வேண்டும். இந்த இலட்சியத்தை அடைவதற்காக உலக இன்பங்களை தூக்கி எறியவோ, தனது உயிரை தியாகம் செய்யவோ தயாராக இருக்க வேண்டும். இதுதான் சத்திய பாதை. இந்த பாதையில் செல்பவர்கள்தான் முஸ்லிம்கள்.

இத்தகைய நற் சிந்தனைகளை உருவாக்கி, வழிகேடுகளை விட்டும் நேர்வழியின் பக்கம் மக்களை திசை திருப்பும் சத்திய முயற்சியிலேயே ஜமாஅதுல் முஸ்லிமீன் ஈடுபட்டுக் கொண்டிக்கின்றது.

அல்லாஹ்விடமிருந்து இறக்கப்பட்ட தூய்மையான இஸ்லாமிய மார்க்கத்தை சிலர் தங்களின் சுய இலாபங்களுக்காகக் கூட்டி, குறைத்து, திரித்துக் கூறி மக்களுக்கு மத்தியிலே கருத்து முரண்பாடுகளை உண்டாக்கி விட்டார்கள். மார்க்கத்தில் உள்ளவற்றை ''இல்லை''யென்று கூறுகின்றார்கள். இல்லாதவற்றையெல்லாம் ''உண்டு'' எனக் கூறுகின்றார்கள். என்றாலும் இவ்வாறு மனோஇச்சைகளை மார்க்கமாக்கியே இத்தீயவர்கள் மக்கள் மத்தியிலே பிரபல்யம் பெற்று விட்டார்கள். இப்பிரபல்யத்திற்கான காரணம் மக்களின் விருப்பத்திற்கேற்ப மார்க்கத்தை இவர்கள் மாற்றுகின்றார்கள். மக்கள் விரும்பும் பத்வாக்களை வழங்குகின்றார்கள்.

அதே நேரம் கடுகளவு கூட்டல், குறைத்தல் இன்றி, எதையும் மறைக்காது, உள்ளதை உள்ளவாறே இஸ்லாத்தை அதன் தூய வடிவில் கூறும் ஜமாஅதுல் முஸ்லிமீன் எனும் சத்தியக் கூட்டம் மக்கள்

மத்தியில் பிரபல்யம் பெறவும் இல்லை; பிரபல்யம் பெற முயற்சிக்கவும் இல்லை. “எங்கே வரம்புமீறி நடந்து அல்லாஹ்வின் தண்டனைக்கு ஆளாகி விடுவோமோ” என்ற அச்சத்துடன் முடிந்தவரை இஸ்லாத்தை அதன் அசல் வடிவத்துடன் பின்பற்றிக் கொண்டிருக்கின்றோம்; தூய வடிவிலேயே மக்களுக்குக் கூறுகின்றோம்.

அத்தகைய எமது த.ஃவா பணியின் ஒரு அம்சமாகவே அல்லாஹ்வினதும் அவன் தூதுர் (ஸல்) அவர்களினதும் வழிகாட்டல்களை விடுத்து, வேறு எந்தவொரு மனித கருத்துக்களும் கலவாத தூய இஸ்லாமிய இதழாக “தெளிவு” எனும் இச்சஞ்சிகை வெளியாகிக் கொண்டிருக்கின்றது.

நிச்சயமாக நேர்வழியைப் பெற்று மறுமையில் சுவர்க்கத்தை அடைய விரும்பும் எந்தவொரு மனிதனும் இப்பிரச்சினைகளை தொடர்ந்து மனமொன்றி வாசிப்பதும் நபி (ஸல்) அவர்களினால் முன்னறிவிப்புச் செய்யப்பட்ட ஜமாஅதுல் முஸ்லிமீன் எனும் இக்கூட்டத்துடன் தொடர்பு கொள்வதும், ஆராய்வதும் அவரது இலட்சியத்தை அடைவதற்கு இன்ஷா அல்லாஹ் நிச்சயம் வழிகாட்டும் என நம்புகின்றோம்.

எனவே சத்தியத்தைத் தேடும் நெஞ்சங்களே! சுவர்க்கத்தை அடையத் துடிக்கும் உள்ளங்களே!

நீங்கள் எந்தக் கொள்கையில் இருந்தாலும், எந்தப் பிரிவில் இருந்தாலும் சத்தியக் கூட்டமாகிய ஜமாஅதுல் முஸ்லிமீனுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்துங்கள். அப்போது நீங்கள் இருப்பது சத்தியமா? அசத்தியமா என்பது தெளிவாகி விடும். அதே நேரம் பொய்களை இட்டுக் கட்டி, எமது ஜமாஅத்தை கொச்சைப்படுத்துபவர்களின்

கூற்றுக்கள் உண்மையானதா? அல்லது பொய்யனதா என்பதை விளங்கிக் கொள்வீர்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் எல்லா மக்களுக்கும் நேர்வழியைக் கிடைக்கச் செய்து, உண்மை முஸ்லிம்களாக அவனைச் சந்திக்க அருள்பாலிப்பானாக!

அன்புடன்

- ஆசிரியர் -

# கேள்வி - பதில்

கேள்வி : 01 ஸூரத்துல் அஃலா என்ற 87வது அத்தியாயத்தில் அல்லாஹ்வை துதி செய்யும்படி கட்டளையிடுகின்றான். எனவே நாம் அதை ஓதும்போது அல்லாஹ்வை துதி செய்வது கடமையா?

பதில் : நபி (ஸல்) அவர்கள் இந்த துஆவை ஓதும் போது

سُبْحَانَ رَبِّيَ الأَعْلَى

“ஸுப்ஹான ரப்பியல் அஃலா”

“உயர்வான எனது “ரப்” மிகத் தூய்மையானவன்”

என்று ஓதுவார்கள். எனவே ஹதீஸ் பொதுவாக வந்துள்ளதால், தொழுகையிலும் சரி, அதற்கு வெளியிலும் சரி அந்த ஸூராவை ஓதும் போது மேற்கண்டவாறு ஓத வேண்டும்.

நபி (ஸல்) அவர்கள் “ஸப்பிஹிஸ்ம ரப்பிகல் அ.்.லா” ஓதினால் “ஸுப்ஹான ரப்பியல் அ.்.லா” என்று ஓதுவார்கள்.

( அபூதாவூத் - ஸஹீஹ் )

கேள்வி : 02 ஒருவர் உணவு அருந்திக் கொண்டிருக்கும்போதும், குர்ஆன் ஓதிக் கொண்டிருக்கும் போதும், தொழுகையில் இருக்கும் போதும் அவருக்கு ஸலாம் கூறலாமா?

பதில் : “உணவு அருந்திக் கொண்டிருப்பவருக்கு ஸலாம் கூறக் கூடாது” என்று எந்தத் தடையும் குரஆன், ஸுன்னாவில் வரவில்லை. எனவே அவருக்கு ஸலாம் கூறலாம். குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பவருக்கு ஸலாம் கூறாது, அவருக்கு முன்னால் நிற்க வேண்டும். அப்போது அவர் ஓதுவதை நிறுத்திய பின் அவருக்கு ஸலாம் கூற வேண்டும்.

அபூ ஸயீத் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள் :

ஒரு ‘காரி’ எங்களுக்கு முன்னால் குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள் வந்து எங்களுக்கு முன்னால் நின்றார்கள். உடனே ஓதுபவர் ஓதுவதை நிறுத்தி அமைதியானார். (அதன் பின்) நபி (ஸல்) அவர்கள் ஸலாம் கூறினார்கள்.

(அபூதாவூத் )

ஓதிக் கொண்டிருப்பவருக்கு நபி (ஸல்) அவர்கள் ஸலாம் கூறாது, அவர் ஓதலை நிறுத்தும் வரை காத்திருந்து ஸலாம் கூறியுள்ளதால், நாமும் அப்படி அமல் செய்வதே நபி வழியாகும்.

தொழுது கொண்டிருப்பவருக்கு ஸலாம் கூறலாம். அதற்கு அவர் வார்த்தைகளால் பதில் கூறாது, கையினால் சைக்கினை செய்ய வேண்டும்.

ஸுஹைப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் :

நபி (ஸல்) அவர்கள் தொழுது கொண்டிருக்கும் போது நான் அவர்களுக்குப் பக்கத்தில் நடந்தேன். அப்போது அவர்களுக்கு ஸலாம் கூறினேன். (அதற்கு) சைக்கினையாக எனக்கு பதிலளித்தார்கள்.

மற்றுமொரு அறிவிப்பில் :

ஜாபிர் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களுக்கு ஸலாம் கூற அவர்கள் கையினால் சைக்கினை செய்தார்கள். (தொழுகை முடிந்ததும்) “நான் உங்களுக்கு ஸலாம் கூறினேன். ‘நீங்கள் எனக்கு ஏன் (சொல்லால்) பதில் சொல்லவில்லை? ” என்று கேட்க நபி (ஸல்) அவர்கள் “நான் தொழுகையில் இருந்தேன்” என்று கூறினார்கள்.

( நஸாஈ - ஸஹீஹ் எண் : 1189 )

கேள்வி : 03 வித்ருத் தொழுகையின் ஆகக் குறைந்த ரகஅத்துகள் எத்தனை?

பதில் : வித்ரு தொழுகைக்கு ஆகக் குறைந்த அளவு ஒரு ரகஅத்தாகும்.

"வித்ருத் தொழுகை இரவின் இறுதியில் ஒரு ரகஅத்தாகும்"
என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( முஸ்லிம், நஸாஈ எண் :1689 )

கேள்வி : 04 ஒரு பெண் வுழுச் செய்து மீதமுள்ள தண்ணீரில் ஒரு ஆண் வுழூச் செய்யலாமா?

பதில் : அப்படி வுழூச் செய்யக் கூடாது எனத் தடை வந்துள்ளது.

ஹகம் பின் அம்ரு கூறினார்கள்:

ஒரு பெண் வுழுச் செய்து மீதியான தண்ணீரில் ஒரு ஆண் வுழுச்செய்வதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்.

(இபுனுமாஜா - எண் : 373 , அன்நஸாஈ - எண் : 342)

கேள்வி : 05 ஒருவர் வுழூச் செய்த பின் தன் மனைவியைத் தொட்டால் அல்லது முத்தமிட்டால் வுழூ முறிந்து விடுமா?

பதில் : அப்படிச் செய்தால் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் வுழூ முறியாது.

அன்னை ஆயஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

நபி (ஸல்) அவர்களின் மனைவிமார்களில் சிலரை முத்தமிடுவார்கள். பிறகு தொழுவார்கள். வுழூச் செய்ய மாட்டார்கள். (இப்னுமாஜா எண் : 502 , நஸாஈ எண் : 170)

கேள்வி : 06 ஒட்டக இறைச்சி சாப்பிட்டால் வுழூ முறியுமா?

பதில் : ஒட்டக இறைச்சி சாப்பிட்டால் வுழூச்செய்து கொள்ள வேண்டும் என நபி (ஸல்) கட்டளையிட்டுள்ளார்கள்.

நிச்சயமாக ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் “ஒட்டக இறைச்சி சாப்பிட்டால் வுழூச் செய்ய வேண்டுமா?” என வினவ “ஆம்” என்றார்கள். ( ஸஹீஹ் முஸ்லிம் )

கேள்வி : 07 சிலர் “ஆண்கள் மீசையை வளர்க்க வேண்டும். இது ஆண்களுக்குரிய அடையாளம். அதை அகற்றுவது பெண்களுக்கு ஒப்பானது” என்கின்றனர். இது சரியா? தெளிவுபடுத்தவும்.

பதில் : “தாடியை வளருங்கள் மீசையை கத்தரியுங்கள்” என பல இடங்களில் நபி (ஸல்) அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். எனவே ஒரு முஸ்லிம் சொந்தக் கருத்துக்களை தள்ளிவிட்டு குர்ஆன் ஸுன்னாவைப் பின்பற்றும் முகமாக தாடியை வளர்த்து மீசையை கத்தரிக்க வேண்டும். “மீசையை வளர்ப்பவர்கள் எங்களைச் சார்ந்தவர்கள் அல்ல” என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

“யார் தன் மீசையை எடுக்கவில்லையோ, அவர் எம்மைச் சார்ந்தவரல்ல” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(திர்மிதி - எண் : 2922 , நஸாஈ - எண் : 12)

கேள்வி : 08 “நீங்கள் வெள்ளை ஆடை அணியுங்கள் அதைக் கொண்டே உங்களில் மரணித்தவர்களுக்கு கபனிடுங்கள்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய ஹதீஸ் நஸாஈயில் காணப்படுகின்றது. “இதில் கட்டளை வந்துள்ளதால் ஒரு முஸ்லிம் வெள்ளை ஆடையைத் தவிர வேறு கலர் ஆடை அணியக் கூடாது”என்றும் “மையித்துக்கு வெள்ளையால் மட்டுமே கபனிட வேண்டும்” என்றும் சிலர் வாதிடுகின்றனர். இதன் விளக்கம் யாது?

பதில் : மேலேயுள்ள ஹதீஸ் நஸாஈயில் எண் 5337ல் பதிவாகியுள்ளது. அதே தொடரில் 5339ம் இலக்க ஹதீஸ் கவணிக்கப்பட வேண்டியது அவசியம்.

அந்த ஹதீஸ் பின்வருமாறு :

நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

“உங்கள் ஆடைகளிலிருந்து வெள்ளையை அணியுங்கள். உங்களில் மரணித்தவர்களுக்கு கபனிடுங்கள். நிச்சயமாக அது உங்கள் ஆடைகளில் சிறந்ததாகும்.”

இவ்விரண்டு ஹதீஸ்களிலும் من ثيابكم “உங்கள் ஆடைகளிலிருந்து” என்றும் فإنها من خير ثيابكم “நிச்சயமாக அது உங்கள் ஆடைகளில் சிறந்ததாகும்” என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறியதிலிருந்து முஸ்லிம்களுக்கு பல நிறமுள்ள ஆடைகள் இருக்கின்றன. அவற்றுள் மிகச்சிறந்தது வெள்ளை என்று கூறுவதிலிருந்து ஏனைய நிறங்களும் அணியலாம் என்பதையே ஹதீஸ் காட்டுகிறது.

மேலும் இந்த ஹதீஸில் أَطْهَر “மிகத் தூய்மையானது” என்று கூறியுள்ளார்கள். இதற்கு கீழானது طاهر “தூய்மையானது’ என்பதாகும். எனவே வெள்ளை ஏனைய நிறங்களிலும் பார்க்க மிகத் தூய்மையானது என்பதனையே ஹதீஸ் காட்டுகின்றது.

மையித்து விடயத்திலும் “வெள்ளைத் துணியால் கபனிடுங்கள்” என்று நபி (ஸல்) கூறிய அதேவேளை கோடு போட்ட துணியால் கபனிடும்படியும் கட்டளையிட்டுள்ளார்கள்.

“உங்களில் ஒருவர் வபாத்தாகி விட்டால் (கபனிட) ஆடை பெற்றுக் கொண்டால், கோடிடப்பட்ட ஆடையால் கபனிடுங்கள்” என்று ந அவர்கள் கூறினார்கள்.

(அபூதாவூத், அஹமத் - தரம் : ஹஸன்

அஹ்காமுல் ஜனாயிஸ் பக்கம் : 83)

ஹதீஸ்களின் முடிவு :

நிறங்கள் கொண்ட ஆடைகளை அணியலாம். ஆனால் வெள்ளை மிகச் சிறந்ததாகும். அதே போன்று நிறங்கள் கொண்ட ஆடைகளால் கபனிடலாம். எனினும் வெள்ளை மிகச் சிறந்தது. நபி ந அவர்கள் பல நிறங்கள் கொண்ட ஆடைகள் அணிந்துள்ளதாக ஸஹீஹான ஹதீஸ்களில் காணப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் விருப்பமான ஆடையைப் பற்றி கூறும் போது

நபி (ஸல்) அவர்களுக்கு மிகவும் விருப்பமான ஆடை கோடு போட்ட ஆடையாகும். ( நஸாஈ : 5330 )

கேள்வி : 09 நின்ற வண்ணம் குடிப்பது தான் ஹதீஸில் தடை வந்துள்ளது. நின்ற வண்ணம் சாப்பிடுவதற்கு தடை வரவில்லை. ஆதலால் நின்ற நிலையில் சாப்பிடலாம் என்று சிலர் வாதிக்கின்றனர். இது சரியானதா?

பதில் : “நின்ற வண்ணம் குடிக்க வேண்டாம்” என்று தடை செய்த நபி (ஸல்) அவர்கள் உட்கார்ந்து குடிக்கும் படியும் கட்டளையிட்டுள்ளார்கள்.

அபூ ஹுரைரா (ரலி) அவர்களைப் பார்த்து إِجْلِسْ فَاشْرَبْ “உட்கார்ந்து குடி.” (ஸஹீஹுல் புகாரி)

மற்றுமொரு அறிவிப்பில் :

“ أُقْعُدْ فَاشْرَبْ (கீழே) அமர்ந்து குடியுங்கள்.”என்று வந்துள்ளது.

இதே போன்று தான் உணவு அருந்தும் விடயத்திலும் நின்ற வண்ணம் அருந்த வேண்டாம் என்று தடை வந்துள்ளது போல் உட்கார்ந்து உணவு உண்ணும் படியும் கட்டளையிட்டுள்ளார்கள்.

நின்ற வண்ணம் உணவு அருந்துவதை தடை செய்துள்ள ஹதீஸ்:

“நின்ற வண்ணம் உணவு அருந்துவதை நபி (ஸல்) தடை செய்தார்கள்.”

(பஸ்ஸார் - அபூய.ஃ.லா அறிவிப்பாளர்கள் நம்பகமானவர்கள். மஜ்மவுஸ்ஸவாயித் 05 - 25 அல் அஹாதீஸுல் ஆலியா 02 - 319

இமாம் பூஸரி இந்த ஹதீஸ் விடயத்தில் மௌனம் சாதித்துள்ளார்.

உட்கார்ந்து உணவு அருந்தும் படி கட்டளை வந்துள்ள ஹதீஸ்:

அம்ரு பின் அபீ ஸலமா கூறுகிறார்கள் :

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

“மகளே... உட்கார் அல்லாஹ்வின் பெயரைக் கூறு, உன் வலது கரத்தால் சாப்பிடு.”

(இப்னு ஹிப்பான் - மவாஹிதுல்லம் ஆன் அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹானது.)

மேலே நாம் காட்டிய ஹதீஸ்களின் அடிப்படையில் நபித்தோழர்களும் இவ்வாறே நடைமுறையில் காட்டியுள்ளார்கள். என்பதைப் பின்வரும் சம்பவங்களின் மூலம் காணலாம்.

“நின்ற வண்ணம் குடிப்பதனை நபி (ஸல்) அவர்கள் தடை செய்துள்ளார்கள். என்ற ஹதீஸை அனஸ் (ஸல்) அவர்கள் அறிவிக்க கதாதா என்ற தாபியீன் “அப்படி யானால் நின்றவண்ணம் சாப்பிடுதல் எப்படி? ” என்று கேட்க, அனஸ் (ஸல்) “அவர்கள் அது மிகவும் கெட்டது, மிகவும் மோசமானது” என்று கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்களின் வபாத்தின் பின்பும் ஸஹாபாக்களிடம் நின்று கொண்டு சாப்பிடும் பழக்கம் இருக்கவில்லை என்பதையே இச்சம்பவம் தெளிவுபடுத்துகின்றது.

இதே போன்றே ஸஹாபாக்களும் நின்று கொண்டு சாப்பிடுபவர்களைப் பார்த்து, “உட்கார்ந்து சாப்பிடுங்கள்” என்று கட்டளையிட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதனை பின்வரும் இச்சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

ஒரு பெண்மணி நோயுற்ற போது “இந்த நோய் குணமடைந்தால் நான் பைத்துல் முகத்தஸ் சென்று தொழுவேன்” என்று நேர்ச்சை

செய்தார். நோய் குணமடைந்து விட்டதும் உடனே அங்கு செல்ல புறப்பட்டு நபி (ஸல்) அவர்களின் மனைவியாகிய அன்னை மைமூனா அவர்களிடம் வந்து ஸலாம் கூறி தன் பிரயாண விடயத்தைக் கூறினார்கள். அதற்கு அன்னை மைமூனா அவர்கள் அப்பெண்ணைப் பார்த்து “உட்காருங்கள்.˙. நீங்கள் செய்த உணவை உண்ணுங்கள்; பிறகு மஸ்ஜிதுன் நபவியில் தொழுங்கள்; ஏனெனில் மஸ்ஜிதுன் நபவியில் தொழுவது ஏனைய பள்ளிகளில் தொழும் ஆயிரம் தொழுகைகளை விடச் சிறந்தது” என்று கூறினார்கள்.

இதில் அன்னை மைமுனா அவர்கள் إِجْلِسِيْ فَكُلِيْ என்று கூறியது எதைக் காட்டுகின்றது என்றால் நபித் தோழர்கள் நபி (ஸல்) அவர்கள் அபூ ஸலமாவுக்கு “உட்கார்ந்து சாப்பிடு” என்று கட்டளையிட்ட ஏவலை நடைமுறைப் படுத்தியுள்ளார்கள் என்பதனைப் புரிந்து கொள்ளலாம்.

விடயம் எவ்வாறாயினும் நின்ற வண்ணம் சாப்பிடுவது, குடிப்பது மார்க்கத்தில் தடுக்கப்பட்ட ஹராமான ஒரு செயலாகும். ஆனால் இந்த ஹராமான செயலை பாமர மக்கள் முதல் உலமாக்கள் வரை பகிரங்கமாக செய்து வருகிறார்கள் என்பது யூத, கிறிஸ்தவர்களை பின்பற்றும் ஒரு செயல் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கேள்வி : 10 ஒருவர் மரணித்து விட்டால் அவரின் மரணச் செய்தியை வானொலி, பத்திரிகை, ஒலிபெருக்கி மூலம் எல்லா மக்களுக்கும் பகிரங்கமாக அறிவிப்பது கூடுமா?

பதில் : ஒருவர் மரணித்து விட்டால் முற்காலத்தில் ஒருவரை கழுதையில் ஏற்றி ஒவ்வொரு தெருக்களிலும் இன்னார்

மரணித்து விட்டார் என்று அறிவிக்கும் பழக்கம் இருந்து வந்தது. இதே போன்று கட்டை அடிப்பவர்களையும் அனுப்பி பகிரங்கப்படுத்துவார்கள். இது ஜாஹிலிய்யத்தவர்களின் செயலாக இருந்தது என்று பத்ஹுல்பாரியில் 03:151ல் கூறுகிறார்.

இச்செயலை நபி (ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்.

“மரண அறிவித்தல் செய்வதை நபியவர்கள் தடுக்க நான் செவியுற்றிருக்கின்றேன்” என்று ஹுதைபா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

(அஹ்மத், இப்னுமாஜா, திர்மிதி - ஸஹீஹ் என்கிறார். இது ஹஸன் தரத்தில் உள்ளது என்று இப்னு ஹஜர் கூறுகிறார்.)

(நைலுல் அவ்தார் பாகம் - 04 பக்கம் - 96)

இந்த ஹதீஸில் மரண அறிவித்தல் தடை என்பது தெளிவாக காணப்படுகின்றது.

மற்றுமொரு ஆகுமான அறிவித்தல் ஒன்று இருக்கின்றது.

அதாவது ஒரு முஸ்லிம் மரணித்து விட்டால், “இன்னார் வபாத்தாகி விட்டார்; தொழுகை நடத்துவதற்காக வாருங்கள்” என்று பள்ளியில் வருகை தந்திருப்பவர்களுக்கு கூறி, அவர்களை அழைத்துக் கொண்டு ஜனாஸா தொழுவிக்கும் முஸல்லாவுக்குச் செல்லுதல்.

இது தடுக்கப்பட்ட விடயம் அல்ல. நஜ்ஜாஸி மன்னர் மரணித்ததும் இப்படி நபி (ஸல்) அவர்கள் அறிவித்து தொழுகை நடாத்தினார்கள்.

எனவே ஊர் உலகம் அறிய மரண அறிவித்தல் செய்வது ஹராம். இது ஜாஹிலிய்யத்தவர்களின் செயலாகும். இதை முஸ்லிம்கள் முற்றாக தவிர்க்க வேண்டும்.

பள்ளிக்கு தொழுகைக்காக வந்திருப்பவர்களுக்கு “இன்னார் வபாத்தாகி விட்டார்; வாருங்கள் தொழுகை நடாத்தி அடக்கம் செய்வோம்” என்று கூறுவது தடுக்கப்பட்டது அல்ல என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

# தொழுகை - தொடர் : 04

## மீண்டும் வுழூச் செய்யும் நிலையை உருவாக்கும் விடயங்கள்

01. சிறுநீர் கழித்தல்,

02. மலம் கழித்தல்

03. காற்று வெளியாகுதல்

உயர்வான அல்லாஹ் கூறுகின்றான்:

அல்லது உங்களிலோ ஒருவர் மல ஜலம் கழித்து விட்டு வந்தால்...... (ஸூரத்துல் மாயிதா : 06 )

ஸப்வான் (ரலி) அவர்கள்கூறுகின்றார்கள் :

நாம் பிரயாணத்தில் இருந்தால் முழுக்கு ஏற்பாட்டாலே தவிர மூன்று பகல்கள் மூன்று இரவுகள் எங்கள் காலுறைகளை கழற்றக் கூடாது என்று எங்களுக்குக் கட்டளையிடுவார்கள். எனினும் மல ஜலம், தூக்கம் (போன்றவற்றிற்கு வுழூ உண்டு)

( திர்மிதி - ஸஹீஹ்)

“சத்தத்தை செவியுறாதவரை அல்லது வாடையை நுகராத வரை தொழுகையை விட்டுச் செல்லமாட்டார். ”

(ஸஹீஹுல் புகாரி )

## 04. தூங்குதல்

“எவர் தூங்கினாரோ, அவர் வுழூச் செய்து கொள்ளட்டும்.” (அபூதாவூத் - ஸஹீஹ்)

குறிப்பு : சிறு தூக்கத்தின் மூலம் வுழூ முறியாது.

உங்களிலே ஒருவருக்கு தொழுகையில் சிறு தூக்கம் வந்தால் ஓதுவதை அவர் இன்னதென்று அறியும் வரை தூங்கட்டும். ( ஸஹீஹுல் புகாரி )

ஒரு மனிதர் வந்து (அல்லாஹ்வின் தூதரே!) எனக்கு ஒரு தேவை உண்டு” எனக் கூறியதும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எழுந்து சென்று மக்கள் அல்லது மக்களில் சிலர் தூங்கும் வரை உரையாடிக் கொண்டிருந்தார்கள். அதன் பிறகு தொழுதார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

குறிப்பு :

இந்த ஹதீஸிலிருந்து தெளிவாகும் விடயம் என்னவென்றால், “மக்கள் தூங்கி விட்டு பிறகு தொழுதார்கள்” என்று வந்துள்ளது. “வுழூச் செய்தார்கள்” என்று இடம்பெற வில்லை. இந்த ஹதீஸ் சிறு தூக்கம் வுழூவை முறிக்காது என்பதை உணர்த்துகின்றது.

## 05. அபத்தைத் திரையின்றித் தொடுதல் :

“யார் தன் அபத்தைத் திரையின்றித் தொடுகின்றாரோ, அவர் வுழூச் செய்து கொள்ளட்டும். (தபரானி - ஸஹீஹ் )

## 06. ஒட்டக இறைச்சி சாப்பிடுதல் :

நிச்சயமாக ஒரு மனிதர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் “ஒட்டக இறைச்சி சாப்பிட்தற்காக வேண்டி, நான் வுழூச் செய்ய வேண்டுமா?” எனக் கேட்டார். அதற்கு “ஆம்” எனக் கூறினார்கள்.
( ஸஹீஹ் முஸ்லிம் )

## 07. மதி வெளியாகுதல் :

“மிகவும் அதிகமாக மதி வெளியாகக் கூடிய மனிதனாக இருந்தேன்” என அலி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள். அவர்களிடத்தில் (அல்லாஹ்வின் தூதரிடத்தில்) இதனைப் பற்றிக் கேட்ட போது, “அதற்கு வுழூ உண்டு” எனக் கூறினார்கள்.
( ஸஹீஹுல் புகாரி )

08. ஆடையை கரண்டையின் கீழ் தொங்கவிடுதல் :

ஒரு மனிதர் தன் ஆடையை கரண்டையின் கீழ் தொங்க விட்ட வண்ணம் தொழுது கொண்டிருந்ததைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் "சென்று வுழூச் செய்து வா" எனக் கூறினார்கள்.

( அபூதாவூத் - ஸனதுஹு ஸஹீஹ் )

## வுழூவின் பல்வேறுபட்ட விடயங்கள்

01. ஒரு வுழூவில் பல தொழுகைகள் தொழ முடியும் :

நிச்சயமாக நபி (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் போது ஒரு வுழூவில் பல தொழுகைகளைத் தொழுதார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் )

02. ஒரு நகத்தின் அளவேனும் நனையாமல் இருந்தால், மீண்டும் வுழூச் செய்து கொள்ள வேண்டும் :

நிச்சயமாக ஒரு மனிதர் தன் பாதத்தில் ஒரு நகத்தின் அளவுஇடத்தை விட்டு விட்டு வுழூச் செய்தார். (வுழூச் செய்து விட்டு வந்தார். அப்போது) நபி (ஸல்) அவர்கள் " திரும்பிச் சென்று உமது வுழூவை அழகாகச் செய்து கொள்ளும்" என்று கூறினார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் )

03. தண்ணீரை வீண்விரயம் செய்யக் கூடாது :

நிச்சயமாக இந்த உம்மத்தில் சுத்தத்திலும் பிரார்த்தனையிலும் வரம்பு மீறக் கூடிய ஒரு சமூகம் சீக்கிரம் உருவாகும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

04. வுளூச் செய்வதற்கு ஒரு முத்து அளவு நீர் போதுமாகும் அதாவது அந்த நீர் 780 கிராம் நிறையைக் கொண்டிருக்கும்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு முத்து நீரைக் கொண்டு வுழூச் செய்யக் கூடியவர்களாக இருந்தார்கள்.

( ஸஹீஹுல் புகாரி )

05. எந்தவொரு ஆணும் எந்தவொரு பெண்ணினதும் எஞ்சியிருக்கக் கூடிய நீரில் வுழூச் செய்ய வேண்டாம்.

ஆண், பெண்ணினது சுத்தப்படுத்தக் கூடிய நீரின் மீதியில் வுளூச் செய்வதை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்.

06. தொழுகையில் வுளூ முறிந்து விட்டால் மூக்கின் மீது கையை வைத்துக் கொண்டு சென்று மீண்டும் வுளூச்செய்து அத்தொழுகையை மீட்டிக் கொள்ள வேண்டும்.

“உங்களிலே ஒருவருக்கு காற்று வெளியானால் (அவர் தொழுகையை விட்டு) சென்று வுளூச் செய்து அத்தொழுகையை மீட்டிக் கொள்ளட்டும்” என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

( அபூதாவூத் )

“உங்களிலே ஒருவருக்கு தன் தொழுகையில் காற்று வெளியாகிவிட்டால் அவர் தன் மூக்கைப் பிடித்துக் கொண்டு (தொழுகையிலிருந்து) வெளியேறட்டும்.

( அபூதாவூத் )

07. கொழுப்புத் தன்மையுள்ள ஏதேனும் ஒரு பொருளை உண்டால் அல்லது அருந்தினால் வாய் கொப்பளித்துக் கொள்ள வேண்டும்.

நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பால் அருந்தி விட்டு வாய் கொப்பளித்தார்கள். மேலும் “நிச்சயமாக இது கொழுப்புத் தன்மை உள்ளதாக இருக்கின்றது” எனக் கூறினார்கள்.

( ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் )

08. தொழுகையில் காற்று வெளியாகிவிட்டது என்ற சந்தேகம் ஏற்பட்டு விட்டால் சத்தம், துர்நாற்றம் வராதவரை அவர் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டேயிருக்கட்டும்.

ஒரு மனிதர் நபி (ஸல்) அவர்களிடத்திலே வந்து “தான் தெழுகையில் ஏதேனுமொன்றைப் பெற்றுக் கொள்வதாகக் காட்டப்படுகின்றது” என்று முறையிட்டார். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) “சத்தத்தை செவிமடுக்காதவரை, துர்நாற்றத்தை நுகராதவரை அவர் தொழுகையை விட்டுச் செல்லமாட்டார்” எனக் கூறினார்கள். (ஸஹீஹுல் புகாரி )

09. ஒருவர் மற்றவருக்கு வுழூச் செய்யும் பொருட்டு நீர் ஊற்றமுடியும்.

“நிச்சயமாக முகீரா அவர்கள் நபி (ஸல்) அவர்கள் மீது தண்ணீரை ஊற்ற அவர்கள் வுழூச் செய்து கொண்டிருந் தார்கள்.” ( ஸஹீஹுல் புகாரி )

.

10. வுழூச் செய்ததன் பிறகு ஒரு கையின் விரல்களை மற்ற கையின் விரல்களுக்குள் கோர்க்க (நுழைக்க)க் கூடாது.

“உங்களில் ஒருவர் தொழுகைக்காக வுழூச் செய்தால் அவர் தன் விரல்களுக்கிடையில் கோர்க்க வேண்டாம்.”

( தபரானிபில் அவ்ஸத் - ஸஹீஹ் அல் ஜாமிஉஸ் ஸகீர் லில் அல்பானி)

# குளிப்பதன் முறை

(கடமையான குளிப்பு )

01. குளிக்க நாடினால் முதலில் இரண்டுகரங்களையும் மணிக்கட்டுவரை மூன்று முறை கழுவ வேண்டும்.

“ஆரம்பித்து பின் இரு கரங்களையும் மூன்றுமுறைக் கழுவினார்கள்.” ( ஸஹீஹ் முஸ்லிம் )

02. பிறகு இடது கையினால் தன் மர்ம உறுப்பு பகுதிகளையும் அசுத்தங்களையும் கழுவ வேண்டும்.

“பிறகு தனது இடது கரத்தில் நீரை ஊற்றி தன் மர்ம உறுப்புப் பகுதிகளை கழுவினார்கள். ”

( ஸஹீஹுல் புகாரி )

மற்றுமொரு அறிவிப்பில் :

“தன் மர்ம உறுப்பையும்அதில் பட்டிருக்கக் கூடிய அசிங்கங்களையும் கழுவினார்கள்.” ( ஸஹீஹுல் புகாரி )

03. பிறகு இடது கரத்தை பூமியின்மீது இரண்டு அல்லது மூன்று முறை தேய்த்துக் கழுவ வேண்டும்.

"பிறகு தனது கரத்தை அல்லது சுவரில் இரண்டு முறை அல்லது மூன்று முறை அடித்தார்கள்."

மற்றுமொரு அறிவிப்பில் :

"தனது கரத்தை பூமியில் அடித்து அதனைத் தேய்த்து பிறகு கழுவினார்கள்". (ஸஹீஹுல் புகாரி )

"பிறகு தனது இடது கரத்தை "மியில் அடித்து அதனை நன்கு தேய்த்தார்கள்". (ஸஹீஹுல் முஸ்லிம் )

04. பிறகு எவ்வாறு தொழுகைக்காக வுழூச் செய்யப்படுகின்றதோ, அவ்வாறு வுழூச˙ செய்து கொள்ளவேண்டும்.

"முதலில் பிஸ்மில்லாஹ் கூறீ, பிறகு வாய்க் கொப்புளித்து நாசிக்கு நீர் செலுத்தி தன் முகத்தையும் தன் இரு கரங்களையும் கழுவினார்கள்." ( ஸஹீஹுல் புகாரி )

மற்றுமொரு அறிவிப்பில் :

"தன் இரு கால்களையும் தவிர, தொழுகைக்காக வுழூச் செய்வது போன்று தன் வுழூவைச் செய்தார்கள்"

(ஸஹீஹுல் புகாரி )

“பிறகு தொழுகைக்கு வுழூச் செய்வது போன்று வுழூச் செய்வார்கள்” (ஸஹீஹுல் புகாரி )

05. மூன்றுமுறை வாய் கொப்பளிக்க வேண்டும். மூன்று முறை நாசிக்கு நீர் செலுத்த வேண்டும். மூன்று முறை முகத்தைக் கழுவ வேண்டும். மூன்று முறை இரு கரங்களையும் முழங்கை வரை கழுவ வேண்டும்.

“பிறகு மூன்றுமுறை வாய் கொப்புளித்தார்கள். மூன்று முறைநாசிக்கு நீர் செலுத்தினார்கள். மூன்று முறை தன் முகத்தையும் தன்கரங்களையும் கழுவினார்கள்.
(நஸாஈ)

06. பிறகு தன் இரு கை விரல்களை தண்ணீரினுள் நனைத்து தலை முடியின் அடிப்பகுதிகளை விரல்களினால் குடைந்து விட வேண்டும். தலையின் தோல் நன்கு கனைந்து விட்டது என்று நம்பிக்கை வரும்வரைக்கும் குடைய வேண்டும். அதன் பிறகு தலை மீது முன்று முறை தண்ணீர் ஊற்ற வேண்டும்.

“பிறகு தன் விரல்களை நீரினுள் நுழைத்து அதன் மூலம் முடியின்அடிப்பகுதிகளை குடைந்து விடுவார்கள். மற்றுமொரு அறிவிப்பில் தான் முடியின் அடிப்பகுதிகளை “நனைத்து விட்டேன்” என்று எண்ணும் வரை (குடைவார்கள்) அதன் பிறகு அதன்மீது (தலை மீது) நீரை மூன்று முறை ஊற்றுவார்கள்.

( ஸஹீஹுல் புகாரி )

07. பிறகு உடலில் நீர் ஊற்ற வேண்டும். அதில் முதலில் வலது பக்கமாகவும் பின்னர் இடது பக்கமாகவும் ஊற்ற வேண்டும்.

"பிறகு தன் உடலின் ஏனைய பகுதிகளைக் கழுவினார்கள்."

( ஸஹீஹுல் புகாரி )

" பிறகு தன்உடம்பின் ஏனைய பகுதிகள்மீது நீர் ஊற்றுவார்கள் " ( ஸஹீஹுல் புகாரி )

" அல்லாஹ்வின் தூதுர் (ஸல்) அவர்களுக்கு அவர்கள் செருப்பு அணியும் விடயத்திலும் தலை சீவும் விடயத்திலும் அவர்களது துப்பரவு விடயத்திலும் வலதை முற்படுத்துவது விருப்பமுள்ளதாக இருந்தது. ( ஸஹீஹுல் புகாரி )

08. பிறகு குளித்த இடத்தை விட்டகன்று இரு கால்ளையும் கழுவிக் கொள்ள வேண்டும்.

"பிறகு தன்னிடத்தை விட்டகன்று தன் இரு பாதங்களையும்கழுவினார்கள். ( ஸஹீஹுல் புகாரி )

# எந்தெந்த சந்தர்ப்பங்களில் குளிப்பது அவசியம்.

01. ஆண் பெண் இருபாலாரினதும் மர்ம உறுப்புக்கள் சந்தித்துக் கொண்டால் குளிப்பு கடமையாகி விடுகின்றது.

"ஒரு மர்ம உறுப்பு மற்றொரு மர்ம உறுப்பைத் தொட்டு விட்டால் நிச்சயம்குளிப்பு கடமையாகி விட்டது."

( ஸஹீஹ் முஸ்லிம் )

02. ஸ்கலிதமாவதன் மூலமும் குளிப்பு கடமையாகி விடுகின்றது.

"பெண் ஸ்கலிதமானால் அவள் குளிப்பது அவசியமா?" எனக் கேட்டார்கள். அதற்கு நபியவர்கள் "ஆம், அவள் ஈரலிப்புத் தன்மையைக் கண்டால்" எனக் கூறினார்கள்.

( ஸஹீஹுல் புகாரி )

03. வெள்ளிக்கிழமையில் குளிப்பது அவசியம்.

"பருவ வயதை அடைந்த ஒவ்வொருவர் மீதும் வெள்ளிக் கிழமை தினத்தில் குளிப்பது கடமையாகும்.

( ஸஹீஹ் முஸ்லிம் )

“ஒவ்வொரு முஸ்லிமின்மீதும் ஏழு நாட்களில் ஏதேனும் ஒரு நாளில் தன் தலையையும் தன் உடலையும் கழுவிக் குளித்துக் கொள்வது அல்லாஹ்வுக்குச் செலுத்தும் கடமையாக இருக்கின்றது.

( ஸஹீஹுல் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் )

04. எவர் மையித்தைக் குளிப்பாட்டுகின்றாரோ, அவர் குளித்துக் கொள்வது அவசியம்.

“யார் மையித்தைக் கழுவுகின்றாரோ, அவர் குளித்துக் கொள்ளட்டும்.” ( திர்மிதி, இப்னுஹிப்பான், நைலுல் அவ்தார்)

05. இஹ்ராம் கட்டும் போது குளிப்பது அவசியம்.

“ஒரு மனிதர் இஹ்ராம் கட்ட நாடினால் அவர் குளித்துக் கொள்ள வேண்டும் என்பது ஸுன்னத்தில் நின்றும் உள்ளது” என இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(ஹாகிம் )

06. இஸ்லாத்தை ஏற்றதன் பிறகு குளிப்பது அவசியம்

“கைஸ் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஏற்றதும் நபி (ஸல்) அவர்கள் குளித்துக் கொள்ளும்படி கட்டளையிட்டார்கள்”

( ஸஹீஹ் இப்னு குஸைமா )

07. மாதவிடாய்ப் பெண்கள் குழந்தைப் பேறுள்ள பெண்கள் தூய்மையாகும் பொருட்டு, குளித்துக் கொள்வது கடமை.

“மாத விடாயின் போது குளிப்பது தொடர்பாக (ஒரு பெண்) கேள்வி கேட்டாள். (அதற்கு) அவள் எவ்வாறு குளித்துக் கொள்ள வேண்டும் என்பதனைக் கொண்டு அவளுக்குக் கட்டளையிட்டார்கள்.”

( ஸஹீஹுல் புகாரி )

## குளிப்பின் பல்வேறுபட்ட விடயங்கள்

01. முழுக்காக இருக்கும் நிலையில் தேங்கிக் கிடக்கும் நீரினுள் குளிக்கக் கூடாது.

“உங்களிலே ஒருவர் முழுக்காக இருக்கும் நிலையில் தேங்கிக் கிடக்கும் நீரில் குளிக்க வேண்டாம்.”

(ஸஹீஹ் முஸ்லிம்)

02. தண்ணீரை வீண்விரயம் செய்ய வேண்டாம்.

“நிச்சயமாக இந்த உம்மத்தில் சுத்தத்திலும் பிரார்த்தனையிலும் வரம்பு மீறக் கூடிய ஒரு கூட்டம் அதி சீக்கிரம் தோன்றும்” எனக் கூறினார்கள்.

(அஹ்மத், அபூதாவூத், இப்னுமாஜா)

03. குளிப்புக்கு “ஒன்றே கால் ஸா.ஃ.” அதாவது 4 கிலோ கிரேம் நீர் போதுமாகும்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் ஒரு “ஸா” இலிருந்து ஐந்து முத்துக்கள் வரையிலான நீரில் குளிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். (ஸஹீஹுல் புகாரி)

குறிப்பு :

ஒரு “ஸா.ஃ.” நான்கு முத்துகளைக் கொண்டது.

04. நிர்வாணமாக நீரினுள் நுழையக் கூடாது.

கைலியைக் (கீழாடை) கொண்டே தவிர நீரினுள் நுழைவதை ரஸுலுல்லாஹி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்.
(இப்னு ஹுஸைமா, ஹாகிம் - ஸஹீஹ்)

05. குளிக்கும் போது திரையைக் கொண்டு மறைக்க வேண்டும்.

“உங்களிலே ஒருவர் குளிப்பதாக இருந்தால் அவர் திரையிட்டுக் கொள்ளட்டும்.”

(அபூதாவூத், நஸாஈ, அஹ்மத் - ஹஸன்)

06. இஸ்லாத்தை ஏற்றதன் பிறகு தண்ணீர் மற்றும் இலந்தை இலைகளைக் கொண்டு குளித்துக் கொள்ள வேண்டும்.

“தான் இஸ்லாத்தை ஏற்றதும் நீரைக் கொண்டும் இலந்தை இலையைக் கொண்டும் குளித்துக் கொள்ளும்படி நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள்” என கைஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்.

(இப்னு குஸைமா - ஸஹீஹ் )

07. பெண் தன் முடியை இறுக்கமாகப் பின்னியிருந்தால் குளிக்கும் போது அவள் அதனை அவிழ்க்க வேண்டிய அவசியம் இல்லை.

அன்னை உம்மு ஸலமா அவர்கள் “நிச்சயமாக நான் எனது தலை முடியை பின்னிக் கட்டக் கூடிய ஒர பெண்ணாக இருக்கின்றேன். முழுக்குடைய குளிப்புக்காக அதனை அவிழ்த்து விட வேண்டுமா?”

எனக் கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் “வேண்டாம்” எனக் கூறினார்கள்.

(ஸஹீஹ் முஸ்லிம்)

08. எந்த ஆணும் குளித்து விட்டு மீதமாக இருக்கக் கூடிய எந்தப் பெண்ணினதும் நீரினால் குளிக்க வேண்டாம். மேலும் எந்தப் பெண்ணும் குளித்து விட்டு மீதமாக இருக்கக் கூடிய எந்த ஆணினது நீரினாலும் குளிக்க வேண்டாம்.

“பெண் ஆணினது எஞ்சியிருக்கும் தண்ணீரில் குளிப்பதையோ அல்லது ஆண், பெண்ணினது எஞ்சியிருக்கும் தண்ணீரில் குளிப்பதையோ நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்.

( அபூதாவூத், நஸாஈ - ஸஹீஹ் )

09. ஒருவர், தன் மனைவியின் மீதமான நீரில் குளிக்கலாம்

“அன்னை மைமூனா அவர்களின் மீதமான தண்ணீரைக் கொண்டு நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் ந அவர்கள் குளிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள்.

( ஸஹீஹ் முஸ்லிம் )

10. குளித்ததன் பிறகு மீண்டும் வுழூச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. குளிப்பின் வுழூவே போதுமானதாகும்.

“ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் குளித்ததன் பிறகு வுழூச் செய்யாதவர்களாக இருந்தார்கள்.” ( திர்மிதி - ஸஹீஹ் )

11. மாதவிடாய் குளிப்பின் போது பெண் தன் அபத்தைக் கழுவும் போது தண்ணீர், இலந்தை இலையைக் கொண்டு நன்கு அதனைக் கழுவ வேண்டும்.

“உங்களிலே ஒருத்தி தண்ணீரையும் இலந்தை இலையையும் எடுத்து (தன்னை) சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அழகான முறையிலும் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.
( ஸஹீஹ் முஸ்லிம் )

12. மாதவிடாய் குளிப்பின் பிறகு எந்தெந்த இடங்களிலே இரத்தம் பட்டிருந்ததோ அந்த இடங்களில் மூன்று முறை வாசனை போன்றவைகளை தேய்த்துக் கொள்ள வேண்டும்.

"கஸ்தூரி சேர்த்த ஒரு பஞ்சுத் துண்டை எடுத்து மூன்று முறை தேய்த்துக் கொள்" எனக் கூறினார்கள்.

( ஸஹீஹுல் புகாரி )

மற்றுமொரு அறிவிப்பில் :

"அதனை இரத்தம் பட்ட இடங்களில் துயரச் செய்" என்று வந்துள்ளது." ( ஸஹீஹுல் புகாரி )

13. எந்தப் பெண்ணுக்காவது மேலதிக இரத்தப் போக்கு என்ற நோய் இருந்தால், மாதவிடாய்க்கான குறிப்பிட்ட சில தினங்கள் கழிந்ததன் பிறகு குளித்ததன் பின்னர் தொழுகையை ஆரம்பிக்க வேண்டும்.

(மேலதிக இரத்தப் போக்குள்ள பெண்ணை நோக்கி)
"உன்னை உனது மாதவிடாய் தடுத்து வைத்திருக்கும் காலம் வரை தரித்திரு. பிறகு நீ குளித்துக் கொள்" எனக் கூறினார்கள்.
( ஸஹீஹ் முஸ்லிம் )

மற்றுமொரு அறிவிப்பில் : "நீ தொழுது கொள்" என்றுள்ளது.

( ஸஹீஹ் முஸ்லிம் )

14. மேலதிக இரத்தப் போக்குள்ள பெண்ணுக்கு சக்தி இருக்குமேயானால் ளுஹரை தாமதப்படுத்தி, அஸரை முற்படுத்தி குளித்துக் கொண்டு அவ்விரண்டையும் ஒன்றிணைத்துத் தொழ வேண்டும். இவ்வாறு மஃரிபை தாமதப்படுத்தி இஷாவைப் முற்படுத்தி குளித்துக் கொண்டு அவ்விரு தொழுகைகளையும் ஒன்று சேர்த்துத் தொழவேண்டும். பஜ்ருத் தொழுகைக்காகவும் குளித்துக் கொள்ள வேண்டும்.

“ஸைனப் என்ற பெண்மணிக்கு அவள் மாதவிடாய் காலங்களிலே, தரித்திருந்து பிறகு குளித்துக் கொள்ள வேண்டும்” என்றும் “ளுஹரைப் பிற்படுத்தி அஸரை முற்படுத்தி குளித்து விட்டு தொழ வேண்டும்” என்றும் “மஃரிபை பிற்படுத்தி, இஷாவை முற்படுத்தி குளித்து விட்டு அவ்விரண்டையும் ஒன்றிணைத்துத் தொழ வேண்டும்” என்றும் “பஜ்ருக்காகக் குளித்துக் கொள்ள வேண்டும்” என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ( நஸாஈ )

“ஹம்னாவை நோக்கி ளுஹரைப் பிற்படுத்தி, அஸரை முற்படுத்தி குளித்துக் கொண்டே ளுஹரையும் அஸரையும் ஒன்றிணைத்து தொழுவதற்கும், பிறகு மஃரிபை பிற்படுத்தி இ'ாவை முற்படுத்தி குளித்ததன் பின்னர் அவ்விரு தொழுகைகளையும் ஒன்றிணைத்து தொழுவதற்கு உனக்கு சக்தி இருந்தால் ‘நீ இப்படிச் செய்து கொள்’ எனக் கூறினார்கள்.

( அபூதாவூத், அஹ்மத், திர்மிதி, நைலுல் அவ்தார். )

15. இரவிலும் பகலிலும் மூன்று முறைக் குளிப்பதற்கு சக்தி இல்லாவிட்டால், ஒரு முறை குளித்து விட்டு ஒவ்வொரு தொழுகைக்கும் புதிதாக வுழூச் செய்து கொள்ள வேண்டும்.

“பின்னர் குளித்து விட்டு ஒவ்வொரு தொழுகைக்காகவும் வுழூச் செய்து தொழுது கொள,, எனக் கூறினார்கள்.

( அபூதாவூத், திரிமிதி - ஸஹீஹ் )

16. முளுக்குடைய சந்தர்ப்பத்தில் எவரையாவது திடீரென சந்திக்க நேரிட்டு, குளிப்பதிலும் ஏற்படுமேயானால் அவர் வுழூச் செய்து விட்டு சந்தித்துக் கொள்ளவும்.

குறிப்பு : குளிப்பின் போது ஷஹாதத் கலிமா ஓதுவதற்கான எதுவித ஆதாரமும் கிடையாது.

“நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அன்ஸாரிகளில் நின்றும் ஒரு மனிதருக்கு (வரும்படி) தூதனுப்பினார்கள். தலையிலிருந்து தண்ணீர் சொட்டு சொட்டாக வடிந்து கொதண்டிருக்கும் நிலையில் உடனே அவர் வந்தார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் “நாம் உம்மை அவசரத்திற்குள்ளாக்கி விட்டோம் போலுள்ளதே” எனக் கூறினார்கள். அதற்கவர் “ஆம்” எனக் கூறினார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் “நீ அவசரத்திற்கு உட்படுத்தப்பட்டால் அல்லது சிரமத்தில் ஆழ்த்தப்பட்டால் வுழூச் செய்து கொள்” எனக் கூறினார்கள்.

(இன்ஷா அல்லாஹ் தொடரும் )

# ஸஹீஹான ஹதீஸ் ஒன்று

அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக உங்களுக்கு முன்னிருந்த வேதங் கொடுக்கப்பட்டவர்கள் 72 மார்க்கமாகப் பிரிந்தனர். நிச்சயமாக இந்த மார்க்கம் 73 ஆகப் பிரியும்.். (அதில்) 72 நரகம் செல்லும்.். ஒன்று சுவனம் செல்லும். அது அல்ஜமாஅத் ( கூட்டமைப்பு ) என்று நபி அவர்கள் கூறினார்கள்.

அபூதாவூத் - அத்தாரமி - அஹ்மது - அல் ஹாகிம் -

அல் ஆஜுரி - இப்னு பத்தா - அல்லாலுதாயி

தரம் : ஹஸன் - ஸஹீஹ்

குறிப்பு : யூதர்களும் கிறிஸ்தவர்களுமே வேதங் கொடுக்கப்பட்டவர்களாவர். இவர்கள் ஏற்கனவே பிரிந்து விட்டார்கள். “எனவே 73 ஆகப் பிரியும ” என்று நபி (ஸல்) அவர்களால் முன்னறிவிப்புச் செய்யப்பட்டவர்கள் யாரெனில், கலிமாச் சொன்ன அவர்களின் இந்த உம்மத்தேயாகும்.

# லயீபான ஹதீஸ் ஒன்று

ரமழான் மாதம் வானத்திற்கும் பூமிக்குமிடையில் தொங்கிக் கொண்டிருக்கும். ஸகாதுல் பித்ர் கொடுக்கப்படும் வரை அது அல்லாஹ்விடம் உயர்த்தப்படமாட்டாது.

இது பலயீனமானது, இது ஸஹீஹ் அல்ல என்கிறார் இப்னு ஜவ்ஸி. அறிவிப்பாளர் தொடரில் முஹம்மது இப்னு உபைத் அல் பஸரி காணப்படுகின்றார். இவர் இனங்காணப்படாத மஜ்ஹுல் ஆவார். இதை இப்னு ஹஜர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

(அல் அஹாதீது லயீபா - எண் : 43 )

குறிப்பு : இந்த ஹதீஸ் பலயீனமானதாக இருந்தாலும் “ஸகாதுல் பித்ர்” கடமையானதொரு விடயம் என்பதற்கு, ஸஹீஹான ஆதாரங்கள் மூலம் காணப்படுவதை எங்கள் சஞ்சிகையின் “தெளிவு- 3” இதழைப் பார்க்கவும்.

# இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ் ஒன்று

என் குடும்பம் நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்களில் எவரைப் பின்பற்றினாலும் நீங்கள் நேர்வழியடைவீர்கள் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இது இட்டுக்கட்டப்பட்டது. அறிவிப்பாளர் தொடரில் அஹ்மது பின் நபீத் காணப்படுகின்றார். இவர் பொய்யர்.

மேலும் அஹ்மது பின் இஸ்ஹாக் என்பவரும் பொய்யராவார். இதை ஹாபிழ் ஏற்றுக் கொண்டுள்ளார்.

( அல் அஹாதீது லயீபா வல் ம.்.லூஆ - எண் : 62 )

# ஜனாஸாத் தொழுகை

**- தொடர்: 04 -**

19. போர்க்களத்தில் அல்லாஹ்வுக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்த ஷஹீதிற்கு ஜனாஸாத் தொழுகையில்லை. விரும்பினால் தொழலாம்.

அ) உஹுது யுத்தத்தில் ஷஹீதானவர்களை ஒரு துணியில் இருவர் இருவராகக் கபனிட்டு அடக்கம் செய்தார்கள். எனினும் அவர்களுக்குத் தொழுகை நடாத்தவில்லை. (ஸஹீஹுல் புகாரி)

ஆ) நாட்டுப் புறத்தைச் சேர்ந்த ஒரு மனிதர் நபி ﷺ அவர்களிடம் வந்து அவர்களை ஈமான் கொண்டார். பிறகு நபித்தோழர்கள் எதிரிகளோடு போராடப் புறப்பட்டார்கள். (அவரும் சென்றார்) யுத்தத்தில் அவருக்கு அம்பு பாய்ந்து அவரை அம்பு தாக்கிய நிலையில் நபி ﷺ அவர்களிடம் சுமந்து கொண்டு வரப்பட்டது. பிறகு அவர் மரணித்து விட்டார். உடனே நபியவர்கள் அவரை அவரது போர்வையினாலேயே கபனிட்டு, முன்னால் வைத்து தொழுகை நடாத்தினார்கள்.

(நஸாஈ, ஸனதுஹு ஸஹீஹ்)

**20. மரணித்தவர் ஒரு பாஸிக் (பாவி) என்று தெரிந்தாலும் அவருக்கு ஜனாஸாத் தொழுகை நடத்தலாம்.**

அபூ கதாதா ﵁ அவர்கள் கூறுகின்றார்கள் :

ஜனாஸாத் தொழுகைக்கு நபி ﷺ அவர்கள் அழைக்கப்பட்டால், அங்கு வந்து அந்த ஜனாஸாவைப் பற்றி விசாரிப்பார்கள். அது “நல்லது” என்று புகழப்பட்டால், நின்று தொழுகை நடாத்துவார்கள். “நல்லவரல்ல” என்று கூறப்பட்டால், அவரின் குடும்பத்தார்களைப் பார்த்து, “நீங்கள் கவனித்துக் கொள்ளுங்கள்” என்று கூறிவிடுவார்கள். தொழுகை நடாத்தமாட்டார்கள்.

(அஹ்மத், அல்ஹாகிம் - ஸனதுஹு ஸஹீஹ். அஹ்காம் )

**21. ஜனாஸாத் தொழுகையை வீட்டிலும் நடாத்தலாம். தொழுகையில் இரு ஆண்கள் மட்டுமிருந்தால், மஃமூமாகிய ஒருவர், இமாமிற்கு வலது பக்கம் நிற்காமல், இமாமிற்கு பின்னால் நிற்க வேண்டும். பெண்களிருந்தால் பின் வரிசையில் நிற்பார்கள்.**

நிச்சயமாக அபூதல்ஹா என்ற நபித்தோழர், தன் மகன் உமைர் வபாத்தானபோது நபி ﷺ அவர்களை (தன்வீட்டிற்கு) அழைத்தார்கள். நபி ﷺ அவர்கள் அங்கு வந்து, அவர்கள் வீட்டிலேயே அவருக்கு தொழுகை நடாத்தினார்கள். அதில் அபூதல்ஹா ﵁ நபி ﷺ அவர்களுக்குப் பின்னாலும் உம்மு சுலைம் அபூதல்ஹாவுக்குப் பின்னாலும் நின்றார்கள். அவர்களுடன் வேறுயாரும் இருக்கவில்லை.

(அல்ஹாகிம், அல்பைஹகி - ஸனதுஹு ஸஹீஹ். அஹ்காம் 98)

## 22. ஜனாஸாத் தொழுகையில் ஒரு ஸலாமும் கொடுக்கலாம்.

அபூ ஹுரைரா ؓ அவர்கள் கூறுகின்றார்கள் :

நபி ﷺ அவர்கள் ஜனாஸாத் தொழுகையில் நான்கு தக்பீர்கள் கூறினார்கள். ஒரு ஸலாம் கொடுத்தார்கள்.

(பைஹகி - ஸனதுஹு ஹஸன். அஹ்காமுல் ஜனாஇஸ் )

## 23. சப்தமிடாமல் அமைதியாகவும் ஸலாம் கொடுக்கலாம்.

அபூ உமாமா ؓ அவர்கள் கூறுகின்றார்கள் :

ஜனாஸாத் தொழுகையில் ஸுன்னத், தனக்குள் அமைதியாக ஸலாம் சொல்வதாகும்.

(இதை இமாம் ஷபிஈ ரஹ்மதுல்லாஹ் பதிவு செய்துள்ளார்கள். இதை இமாம் பைஹகி வலுப்படுத்தியுள்ளார்கள். - நைலுல் அவ்தார் )

# மண்ணறை

01. ஜனாஸாவை அடக்கம் செய்வதற்காக "கப்ர்" தோண்டும்போது, அதை விசாலமாகவும், ஆழமாகவும், அழகாகவும் அமைக்க வேண்டும்.

அ) நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

"கப்ர்" தோண்டும்போது அதை விசாலப்படுத்துங்கள். அதை அழகாக்குங்கள். அதை ஆழமாக்குங்கள்.
(அஹ்மத், அபூதாவூத், திர்மிதி, நஸாஈ - ஸனதுஹு ஸஹீஹ். அஹ்காமுல் ஜனாஇஸ்)

ஆ) **மற்றுமொரு அறிவிப்பில் :**

"தலை பக்கமும், இரு கால்கள் பக்கமும் விசாலப்படுத்துங்கள் என்றார்கள்." (அஹ்மத், அபூதாவூத்)

02. "கப்ர்" இரண்டு வகையாகத் தோண்டலாம். ஒன்று, எங்கள் நாட்டில் வழமையாகத் தோண்டப்படும் கப்ர். இரண்டு அறபியில் (லஹ்த்) என்று சொல்லப்படும். அது எங்களிடம் வழமையிலுள்ளபடி கப்ரைத் தோண்டி, அதற்குள்ளே ஓரத்தில் மற்றுமொரு குழியெடுத்து ஜனாஸாவை அந்தக்குழிக்குள் வைத்து அடக்கம் செய்வது. இப்படி முதல் கப்ரிற்கு "லரீஹ" என்றும், இரண்டாவது கப்ரிற்கு "லஹ்த்" என்றும் அரபியில் கூறப்படும். இந்த இரண்டில் எதை வேண்டுமானாலும் தோண்டலாம். குறிப்பாக மணல் பிரதேசத்தில் "லஹ்த" சாத்தியமில்லை.

அனஸ் ﵁ அவர்கள் கூறுகின்றார்கள் :

(எங்களில் இருவர் இருந்தனர்.) ஒருவர் ‘லஹீஹ்’ என்ற கப்ர வெட்டுபவர். மற்றவர், ‘லஹ்த்’ என்ற கப்ர் வெட்டுபவர். நபி ﷺ அவர்கள் வபாத்தானதும், (அவர்களுக்கு) எந்த ‘கப்ர்’ வெட்டுவது என்ற விடயத்தில் தோழர்கள் (பின்வருமாறு) கூறினார்கள் : “எங்கள் ரப்பிடம் பிரார்த்திப்போம்.(இஸ்திஹாராத் தேடுவோம்.) பிறகு அந்த இருவருக்கும் செய்தி அனுப்புவோம். யார் முதலில் வருகிறாரோ, அவரை கப்ர் வெட்ட விட்டுவிடுவோம்” என்று முடிவெடுத்து இருவருக் கும் செய்தியனுப்பினார்கள். ‘லஹ்த்’ என்ற கப்ர் தோண்டுபவர் முதலில் வந்துவிட்டார். உடனே அதையே தோண்டினார்கள்.

(அஹ்மத், இப்னுமாஜா - ஸனதுஹு ஹஸன்.
அஹ்காமுல் ஜனாஇஸ் )

03. கப்ர்களை உயர்த்தக்கூடாது. அவ்வாறு உயர்த்தப்பட்டிருப்பதை யாராவது கண்டால், அதனை சமமாக்கி விட வேண்டும்.

அபுல் ஹய்யாஜ் அல் அஸதீ அவர்கள் அலி ﵁ அவர்கள் தனக்குக் கூறியதாகக் கூறுகின்றார்கள் :

“(ஹய்யாஜே!) நபி ﷺ அவர்கள் என்னை எந்தப் பணிக்கு அனுப்பினார்களோ, அப்பணிக்கு உன்னை நான் அனுப்புகின்றேன். எந்த ஓர் உருவத்தையும், அதை அழிக்காமல் விட்டுவைக்காதே! உயர்த்தப்பட்ட எந்தவொரு மண்ணறையையும் அதை சமப்படுத்தாமல் விட்டுவைக்காதே” என்று கூறியனுப்பினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

04. கப்ருகளுக்கு மேல் சுண்ணாம்பு பூசுதல், அதன்மீது உட்காருதல் அதற்கு மேல் கட்டடங்களைக் கட்டுதல் (குப்பாப் போன்றவை) தடுக்கப்பட்டவைகளாகும்.

‘கப்ர்களுக்குச் சுண்ணாம்பு பூசுவதையும் அதன்மீது உட்காருவதையும், அதற்கு மேல் கட்டடங்கள் கட்டுவதையும் நபி ﷺ அவர்கள் தடுத்தார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

05. கப்ரில் எழுதுதல், கப்ர் தோண்டப்பட்ட மண்ணைவிட மேலதிகமான மண்ணை அதில் போடுதல் போன்றவை தடுக்கப்பட்டவையாகும்.

கப்ரின்மீது கட்டடங்கள் கட்டுவதையும், அதன் மண்ணைவிட அதிகரிப்பதையும், சுண்ணாம்புப் பூசுவதையும், அதன்மீது எழுதுவதையும் நபி ﷺ அவர்கள் தடுத்துள்ளார்கள்.
(நஸாஈ, ஹாகிம் - ஸனதுஹு ஸஹீஹ். அஹ்காம் )

06. கப்ரின்மீது மிதிப்பது தடுக்கப்பட்டுள்ளது. மையவாடிக்குச் செல்பவர்கள் கப்ருகளை மிதித்துவிடாது கவனமாகச் செல்ல வேண்டும்.

மண்ணறைகளுக்குச் சாந்து பூசுவதையும், அதன்மீது எழுதுவதையும், அதன்மீது கட்டடங்கள் கட்டுவதையும், அதை மிதிப்பதையும் நபி ﷺ அவர்கள் தடுத்தார்கள்.
(இது ஸஹீஹ் என்ற தரத்திலுள்ளது என்று திர்மிதி கூறுகின்றார்.)

## 07. மண்ணறையின்மீது யாரும் சாய்ந்திருக்கக் கூடாது.

அம்ர் இப்னு ஹஸ்ம் ﵁ அவர்கள் கூறுகின்றார்கள் :

நான் ஒரு கப்ரின்மீது சாய்ந்திருப்பதைக் கண்ட நபி ﷺ அவர்கள் "அவரை நோவினை செய்யாதே!" என்று எனக்குக் கூறினார்கள்.

(அஹ்மத், நஸாஈ - ஸனதுஹு ஸஹீஹ். மிர்ஆத் 3/509)

## 08. கப்ருகளை முன்னோக்கித் தொழக் கூடாது.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :

கப்ருகள்மீது உட்காராதீர்கள். அவைகளை நோக்கித் தொழாதீர்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

✡ மஸ்ஜிதுந் நபவிக்குள் நுழைபவர்கள் தொழும்போது தங்க ளுக்கு முன்னால் நபி ﷺ அவர்களுடையதும், மற்றும் அபூபக்கர் ﵁, உமர் பின் கத்தாப் ﵁ போன்றவர்களின் கப்ருகள் வராதவாறு கவனித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் "கப்ருகளை நோக்கித் தொழாதீர்கள்" என்று பொதுவாகவே ஹதீஸ் வந்துள்ளது. அதில் "எனது கப்ரையும், எனது தோழர்களின் கப்ருகளையும் தவிர" என்று வரவில்லை என்பதை கவனத்திற் கொள்ள வேண்டும்.

# அடக்கம் செய்தல்

01. “ஜனாஸாத் தொழுகை நடாத்தக் கூடாது” எனத் தடுக்கப்பட்ட மூன்று நேரங்களில், ஜனாஸாவை அடக்கம் செய்யவும் கூடாது. அவைகள் : சூரியன் உதிக்கும்போதும், சூரியன் உச்சியில் இருக்கும் போதும், சூரியன் மறையும் போதும்.

உக்பா ﵁ அவர்கள் கூறுகின்றார்கள் :
மூன்று நேரங்களில் நாங்கள் தொழுவதையும், அதில் ஜனாஸாக்களை அடக்குவதையும் நபி ﷺ அவர்கள் தடுத்தார்கள்.
(ஸஹீஹ் முஸ்லிம்)

(இந்த ஹதீஸின் தொடர் “ஜனாஸாத் தொழுகை” என்ற தலைப்பில் வந்துள்ளது.)

02. ஜனாஸாவைக் கப்ரின் கால் பக்கமிருந்து கப்ரிற்குள் தூக்கி எடுக்க வேண்டும். கப்ரின் தலைப்பக்கமாக உள்ளே எடுப்பது நபிவழிக்கு மாற்றமானதாகும்.

ஹாரிஸ் என்பவர், தனக்கு ஜனாஸாத் தொழுகையை அப்துல்லாஹ் பின் யஷீத் என்பவர் தொழுவிக்க வேண்டும் என்று வஸிய்யத் செய்திருந்தார். அதன் பிரகாரம் அவர் அவருக்கு ஜனாஸாத் தொழுகை நடாத்திவிட்டு, கப்ரின் கால் பக்கமாக இருந்து ஜனாஸாவைக் கப்ரிற்குள் வைத்தார்கள். பின்பு இதுதான் “ஸுன்னத்” என்றும் கூறினார்.
(அபூதாவூத் - இதன் அறிவிப்பாளர்கள் அனைவரும் புகாரி, முஸ்லிம் அறிவிப்பாளர்களாவர். - நைலுல் அவ்தார் - அஹ்காமுல் ஜனாஇஸ் )

03. மையித்தை கப்ரிற்குள் வைக்கும்போது பின்வரும் பிரார்த்தனையை ஓத வேண்டும்.

பிஸ்மில்லாஹி வஅலா மில்லதி ரஸூலில்லாஹ்
அல்லாஹ்வின் திருநாமத்தைக் கொண்டும், அல்லாஹ்வின் தூதரின் வழிமுறைப்படியும் (இதனை கப்ரினுள் வைக்கிறேன்.)

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :
உங்களில் மரணித்தவர்களை மண்ணறையில் வைக்கும்போது, பிஸ்மில்லாஹி வஅலா மில்லதி ரஸூலில்லாஹ் என்று கூறுங்கள்.
(அஹ்மத், அபூதாவூத், நஸாஈ, அல்ஹாகிம் - ஸனதுஹு ஸஹீஹ். புலூகுல் அமானி, அஹ்காமுல் ஜனாஇஸ் )

04. ஜனாஸாவை அடக்கம் செய்யும்போது அதன் முகத்தை கிப்லாவின் பக்கம் வைத்து அடக்கம் செய்ய வேண்டும்.

நபி ﷺ அவர்கள் கூறினார்கள் :
நீங்கள் உயிரோடிருக்கும் போதும், மையித்தாக இருக்கும்போதும் (இந்த கிப்லாதான்) உங்கள் கிப்லா.
(ஹாகிம் - ஸனதுஹு ஸஹீஹ் )

05. ஜனாஸாவை அடக்கம் செய்து முடிந்ததும், அதன் தலைப்பக்கம் வந்து மூன்று பிடி மண்ணெடுத்து அதன்மீது போடவேண்டும். மண்ணை போடும்போது, ‘‘மின்ஹா கலக்னாகும்’’ என்ற குர்ஆன் வசனத்தை ஓத வேண்டும் என்று வந்துள்ள ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்டதாகும். எனவே ஏதும் ஓதாது மூன்று பிடி மண்ணெடுத்து கப்ரிற்குள் போட வேண்டும்.

நபி ﷺ அவர்கள் ஒரு ஜனாஸாவுக்குத் தொழுகை நடாத்தினார்கள். பின்பு மையித்தின் கப்ரிற்கு வந்து அதன் தலைப்பக்கம் நின்று மூன்று பிடி மண்ணெடுத்துப் போட்டார்கள்.

(இப்னுமாஜா. இப்னு அபூதாவூத் இது ஸஹீஹ் என்கின்றார். இதன் அறிவிப் பாளர்கள் அனைவரும் நம்பகமானவர்கள் என்று ஹாபிழ் இப்னு ஹஜர் கூறுகின்றார். இதை வலுவூட்டக்கூடிய பல ஹதீஸ்கள் இருக்கின்றன. - நைலுல் அவ்தார் )

06. கப்ர் தோண்டும்போது அதிலிருந்து எடுத்த மண்ணை விட கூடுதலான மண்ணை கப்ரை மூடும்போது சேர்க்கக் கூடாது. அதிலுள்ள மண்ணை வைத்தே போதுமாக்கிக் கொள்ள வேண்டும். ஏனைய பக்கங்களிலிருந்து மண்ணை மண் வெட்டியால் இழுத்துச் சேர்க்கக் கூடாது.

கப்ரிற்கு மேல் கட்டடங்கள் கட்டுவதையும், அதில் வேறு மண்ணைக் கூட்டுவதையும் நபி ﷺ அவர்கள் தடுத்தார்கள்.

(நஸாஈ)

07. ஜனாஸாவை அடக்கி முடிந்ததும் உடனே அவ்விடத்தை விட்டுப் புறப் பட்டுச் செல்லாது, அவ்விடத்தில் சற்று தாமதித்து கிப்லாவை முன்னோக்கி இரு கைகளையும் உயர்த்தி மையித்திற்காக பிரார்த்திக்க வேண்டும். முன்கர், நகீர் அவர்களின் கேள்விகளுக்குத் தளராது பதிலளிக்கும் உறுதிப்பாட்டை யும் வழங்க அல்லாஹ்விடம் அவருக்காகப் பிரார்த்திக்க வேண்டும்.

நபி ﷺ அவர்கள் மையித்தை அடக்கம் செய்து முடிந்து விட்டால் அந்த இடத்தில் நின்று, “உங்கள் சகோதரருக்குப் பாவமன்னிப்புக் கோருங்கள். பிறகு அவருக்கு உறுதிப்பாட்டைக் கொடுக்கும்படி கேளுங்கள். ஏனெனில் அவர் இப்போது கேள்வி கேட்கப்படுகின்றார்” என்று கூறுபவர்களாக இருந்தார்கள்.

(அபூதாவூத் - ஸனதுஹு ஸஹீஹ் - மிர்ஆத்)

இப்னு மஸ்ஊத் ؓ அவர்கள் கூறுகின்றார்கள்:

அப்துல்லாஹ் அந்நஜ்ஜாதீன் என்பவரின் கப்ருக்கருகில் நபி ﷺ அவர்களைக் கண்டேன். அவரை அடக்கி முடிந்ததும் கிப்லாவை முன்னோக்கி தங்கள் இரு கைகளையும் உயர்த்தியவர்களாக இருந்தார்கள்.

(அபூஅவானா இதை தனது ஸஹீஹ் என்ற கிரந்தத்தில் பதிவு செய்துள்ளார். அல்ஹாபிழ் இது சம்பந்தமாக குறை, நிறை கூறாது மௌனமாகி விட்டார்கள்.

(பத்ஹுல் பாரி)

08. ஒரு கப்ரிற்குப் பக்கத்தில் மற்றுமொரு ஜனாஸாவை அடக்கம் செய்தால், தன் குடும்பத்தார்களை அவ்விடத்தில் அடக்கம் செய்வதற்கு

அடையாளம் காண்பிப்பதற்காக வேண்டி அந்தக் கப்ரிற்கு மேல் ஒரு கல்லை அடையாளமாக வைக்கலாம்.

உஷ்மான் பின் மழ்ஊன் வபாத்தானதும் நபி ﷺ அவர்கள் ஜனாஸாவுடன் சென்று அதை அடக்கிவிட்டு, ஒரு கல்லைத் தூக்கி வரும்படி ஒருவருக்குக் கட்டளையிட்டார்கள். அதைக் கொண்டு வந்ததும் அவரின் தலைப்பக்கம் அதனை வைத்து விட்டு, "என் சகோதரரின் கப்ரை நான் அறிந்து கொள்ளவும், என் குடும்பத்தில் யாராவது மரணித்தால் இவருக்கு அருகில் அவர்களை அடக்கம் செய்வதற்கும் இந்தக் கல்லை நான் அடையாளமாக வைத்தேன்" என்றார்கள்.
(அபூதாவத் - ஸனதுஹு ஹஸன். - நைலுல் அவ்தார், அஹ்காமுல் ஜனாஇஸ் )

09. ஒரு கப்ரிற்குள் பல பேர்களை அடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அவர்களில் யார் அதிகமாகக் குர்ஆனை (உள்ளத்தில்) வைத்திருக்கிறாரோ, அவரை முதலில் கப்ரிற்குள் முற்படுத்த வேண்டும்.

உஹதுப் போர்க்களத்தில் ஷஹீதானவர்களில் இருவரை ஒரு துணியில் கபனிட்டு, இவர்களில் யார் அதிகமாகக் குர்ஆனை (மனனமிட்டு) வைத்திருப்பவர் என்று நபி ﷺ அவர்கள் கேட்டார்கள். அவ்விருவரில் ஒருவரின்பால் சுட்டிக்காட்டியதும் அவரை கப்ரிற்குள் முற்படுத்தினார்கள். (ஸஹீஹுல் புகாரி)

உஹது தினத்தில் நபி ﷺ அவர்கள், "அவர்களின் ஆடைகளாலேயே போர்த்துங்கள்" என்று கூறிவிட்டு, ஒரு கப்ரில் பத்துக்குட்பட்டவர்களை அடக்கம் செய்தார்கள். அப்போது "அவர்களில் குர்ஆனை அதிகம் மனனம் செய்தவர்களை முற்படுத்துங்கள்" என்றார்கள்.

(அஹ்மத், அபூதாவூத். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு த.ஃலபா, அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹான தொடர். - நைலுல் அவ்தார் )

மற்றுமொரு அறிவிப்பில் :

இரண்டிரண்டு பேர்களாக அல்லது மும்மூன்று பேர்களாக ஒரு கப்றில் அடக்கம் செய்யுங்கள். அவர்களில் குர்ஆனை அதிகம் மனனம் செய்திருப்பவர்களை (கப்றில்) முற்படுத்துங்கள் என்று கூறியுள்ளார்கள். (திர்மிதி)

இப்னு மஸ்ஊத் ﷺ அவர்கள் கூறுகின்றார்கள்:

அப்துல்லாஹ் அந்நஜ்ஜாதீன் என்பவரின் கப்ருக்கருகில் நபி ﷺ அவர்களைக் கண்டேன். அவரை அடக்கி முடிந்ததும் கிப்லாவை முன்னோக்கி தங்கள் இரு கைகளையும் உயர்த்தியவர்களாக இருந்தார்கள்.

(அபூஅவானா இதை தனது ஸஹீஹ் என்ற கிரந்தத்தில் பதிவு செய்துள்ளார். அல்ஹாபிழ் இது சம்பந்தமாக குறை, நிறை கூறாது மௌனமாகி விட்டார்கள்.

(பத்ஹுல் பாரி)

08. ஒரு கப்றிற்குப் பக்கத்தில் மற்றுமொரு ஜனாஸாவை அடக்கம் செய்தால், தன் குடும்பத்தார்களை அவ்விடத்தில் அடக்கம் செய்வதற்கு அடையாளம் காண்பிப்பதற்காக வேண்டி அந்தக் கப்றிற்கு மேல் ஒரு கல்லை அடையாளமாக வைக்கலாம்.

உஷ்மான் பின் மழ்ஊன் வபாத்தானதும் நபி ﷺ அவர்கள் ஜனாஸாவுடன் சென்று அதை அடக்கிவிட்டு, ஒரு கல்லைத் தூக்கி வரும்படி ஒருவருக்குக் கட்டளையிட்டார்கள். அதைக் கொண்டு வந்ததும் அவரின் தலைப்பக்கம் அதனை வைத்து விட்டு, “என் சகோதரரின் கப்ரை நான் அறிந்து கொள்ளவும், என் குடும்பத்தில் யாராவது மரணித்தால் இவருக்கு அருகில் அவர்களை அடக்கம் செய்வதற்கும் இந்தக் கல்லை நான் அடையாளமாக வைத்தேன்” என்றார்கள்.
(அபூதாவத் - ஸனதுஹு ஹஸன். - நைலுல் அவ்தார், அஹ்காமுல் ஜனாஇஸ் )

09. ஒரு கப்றிற்குள் பல பேர்களை அடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், அவர்களில் யார் அதிகமாகக் குர்ஆனை (உள்ளத்தில்) வைத்திருக்கிறாரோ, அவரை முதலில் கப்றிற்குள் முற்படுத்த வேண்டும்.

உஹதுப் போர்க்களத்தில் ஷஹீதானவர்களில் இருவரை ஒரு துணியில் கபனிட்டு, இவர்களில் யார் அதிகமாகக் குர்ஆனை (மனனமிட்டு) வைத்திருப்பவர் என்று நபி ﷺ அவர்கள் கேட்டார்கள். அவ்விருவரில் ஒருவரின்பால் சுட்டிக்காட்டியதும் அவரை கப்ரிற்குள் முற்படுத்தினார்கள். (ஸஹீஹுல் புகாரி)

உஹது தினத்தில் நபி ﷺ அவர்கள், "அவர்களின் ஆடைகளாலேயே போர்த்துங்கள்" என்று கூறிவிட்டு, ஒரு கப்ரில் பத்துக்குட்பட்டவர்களை அடக்கம் செய்தார்கள். அப்போது "அவர்களில் குர்ஆனை அதிகம் மனனம் செய்தவர்களை முற்படுத்துங்கள்" என்றார்கள்.

(அஹ்மத், அபூதாவூத். அறிவிப்பவர் : அப்துல்லாஹ் இப்னு த.்.லபா, அறிவிப்பாளர் தொடர் ஸஹீஹான தொடர். - நைலுல் அவ்தார் )

மற்றுமொரு அறிவிப்பில் :

இரண்டிரண்டு பேர்களாக அல்லது மும்மூன்று பேர்களாக ஒரு கப்றில் அடக்கம் செய்யுங்கள். அவர்களில் குர்ஆனை அதிகம் மனனம் செய்திருப்பவர்களை (கப்றில்) முற்படுத்துங்கள் என்று கூறியுள்ளார்கள். (திர்மிதி)

10. போர்க்களத்தில் 'ஹீதானவர்களை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லாது, எந்த இடத்தில் 'ஹீதானார்களோ, அதே இடத்தில் அடக்கம் செய்ய வேண்டும்.

ஜாபிர் ﷺ அவர்கள் கூறினார்கள் :
உஹுது தினத்தில் என் மாமி என் தந்தையின் சடலத்தை எடுத்துக் கொண்டு எங்கள் மையவாடியில் அடக்கம் செய்ய வந்தார்கள். அப்போது நபி ﷺ அவர்களின் ஓர் அழைப்பாளர் (அங்கு நின்று கொண்டு) “கொல்லப்பட்டவர்களை அவர்கள் ஷஹீதான இடத்திற்கே எடுத்துச் செல்லுங்கள்” என்று கூறினார்கள்.
(திர்மிதி, ஸஹீஹ் அபூதாவூத், நஸாஈ, இப்னுமாஜா - அஹ்காம் )

11. அடக்கம் செய்யப்பட்ட ஜனாஸாவை ஏதோ ஒரு தேவை ஏற்பட்டால், அதை வெளியில் எடுத்துவிட்டு, மீண்டும் அடக்கம் செய்யலாம்.

அப்துல்லாஹ் பின் உபை மரணித்து கப்ரிற்குள் புகுத்திய பின்னர், நபி ﷺ அவர்கள் அங்கு வந்து, “வெளியில் எடுக்கும்படி கட்டளையிட்டார்கள். உடனே அவர் வெளியில் எடுக்கப்பட்டார். பிறகு அவரை தன் இரு முழங்கால்களிலும் வைத்து, தம் உமிழ் நீரை அவர்மீது துப்பிவிட்டார்கள். மேலும் தங்களின் சட்டையை அவருக்கு அணிவித்தார்கள். (ஸஹீஹுல் புகாரி)

12. ஜனாஸாவை அடக்கம் செய்வதில் ஏதும் தாமதம் ஏற்பட்டால், அங்கு சமுகமளித்திருப்பவர்கள் நிற்காமல் உட்கார்ந்திருப்பதே நபி வழியாகும்.

பர்ராஉ ﷺ அவர்கள் கூறினார்கள் :

அன்ஸாரிகளில் ஒருவரின் ஜனாஸாவில் கலந்து, நபி ﷺ அவர்களுடன் புறப்பட்டுச் சென்றோம். மையவாடியை அடைந்தபோது, கப்ர் இன்னும் வெட்டப்படவில்லை. நபி ﷺ அவர்கள் கிப்லாவை முன்னோக்கி உட்கார்ந்தார்கள். நாங்களும் அவர்களுடன் உட்கார்ந்தோம்.

(அபூதாவூத், நஸாஈ - ஸனதுஹு ஸஹீஹ். அத்த.்.லீகாத் லில் அல்பானி அலல் மிஷ்காத் )

# மையித்தின் உறவினர்கள்

01. ஒருவர் மரணித்து விட்டால் அவரின் வீட்டாருக்கு உணவு சமைத்து அனுப்பி வைப்பது அயலவர்களின் கடமையாகும். ஏனெனில் அவர்கள் கவலையினாலும், துக்கத்தாலும் இருப்பார்கள்.

ஜ.்.பர் பின் அபூதாலிபின் மரணச் செய்தி கிடைத்ததும் “ஜ.்.பரின் குடும்பத்தாருக்கு உணவு சமைத்து அனுப்புங்கள். நிச்சயமாக அவர்களை (தங்கள் வேலைகளை விட்டும்) பராக்கக் கூடிய (மரணம்) பீடித்திருக்கிறது” என்று நபி ﷺ அவர்கள் கூறினார்கள்

(திர்மிதி , அபூதாவூத் ,ஸனதுஹு ஸஹீஹ்)

02. மையித்தை அடக்கம் செய்து விட்டு அவரின் வீட்டில் ஒன்று கூடுதல், விஷேடமாக உணவு சமைத்தல் போன்ற விடயங்களில் ஈடுபடாது தவிர்ந்து கொள்ள வேண்டும்.

ஜரீர் ﷺ அவர்கள் கூறுகின்றார்கள் :

ஒரு ஜனாஸாவை அடக்கம் செய்தபின் அவரின் வீட்டில் ஒன்று சேர்வதையும், அங்கு உணவு சமைப்பதையும் மையித்திற்காக ஓலமிட்டு அழும் குற்றத்தைப் போன்று கருதுபவர்களாக இருந்தோம்.

(அஹ்மத், இப்னுமாஜா - ஸனதுஹு ஸஹீஹ். அஹ்காம் - புலூகுல் அமானி)

**(மிகுதி தெளிவு 06ல்)**